விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 11.35 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 11.50 a.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.116/2025**

**Prosecution side witness : அ.சா.2** **Date : 28.04.2025**

| | |
|---|---|
| **Name : கோவிந்தசாமி** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name :செண்ணியப்பகவுண்டர்** | **Calling : கூலி** |
| **Village : கொளத்தூர்** | **Age : 69** |

(A1 to A5 present. A6 absent. Filed petition and allowed )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கொளத்தூரில் மாங்காட்டில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அதில் எனது மகன் பாரதிராஜா மற்றும் அவருடைய மனைவி ஜெயபிரியா ஆவார். என்னுடைய மனைவி கேன்சர் நோயால் இறந்துவிட்டார். சம்பவம் நடந்த சமயத்தில் நான் என்னுடைய வீட்டில் நான் ஒரு ரூமிலும் மகன் மற்றும் மருமகள் அதே வீட்டில் வேறு ஒரு அறையில் குடியிருந்து வந்தோம். என்னுடைய அறையில் பீரேவில் இருந்த 3 பவுன் நகை, பணம், ரூ.1,50,000/–, வீட்டுபத்திரம், TVS XL வண்டியின் சாவி அதனுடைய புத்தகம் மற்றும் குடும்ப அட்டை என்னுடைய மகன் பாரதிராஜா எடுத்துச்சென்றுவிட்டார்.

2) இது சம்மந்தமாக நான், மாரிமுத்து, சுப்பிரமணி, முத்துசாமி, குமார் ஆகியோருடன் சென்று எனது வீட்டில் இருந்து எடுத்துச் சென்ற மேலே சொன்ன பொருட்களை கொடுக்க வேண்டி எனது மகனிடம் பஞ்சாயத்து பேசினோம். அப்போது எதிரி பாரதிராஜா இது எனக்கு என் அப்பாக்கு

உள்ள பிரச்சனை நீங்கள் யாரும் பேச வேண்டாம் என்று சொன்னார். அதன் பிறகு 4, 5 நாட்கள் கழித்து என் வீட்டிற்கு வெளியே இருந்த என்னுடைய வண்டியை நிறுத்திவிட்டு நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது 7 பேர் உட்காரக்கூடிய வெள்ளை நிற காரில் 3 பேர் வந்தார்கள். அவர்களை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜர் எதிரிகள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளனர். சாட்சி எதிரிகளை அடையாளம் காட்டினார். அவர்களுடன் என் மகன் சேர்ந்துக்கொண்டு என்னை தர தரவென்று இழுத்துக்கொண்டு காரில் ஏற்றிக்கொண்டு செல்லும்போது அங்கு உள்ளவர்கள் குறுக்காட்டினார்கள். அவர்கள் மீது மோதுவது போல் சென்று நிற்காமல் போய்விட்டனர். என்னை முகத்தில் துணி கொண்டு கட்டி எங்கு அழைத்துச் சென்றார்கள் என்று தெரியவில்லை. மீண்டும் என்னை வா போகலாம் என்று கொளத்தூர் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். ஊர்காரர்கள் எதிரிகளை குறுக்காட்டி எதற்காக கடத்தி சென்றீர்கள் என்று கேட்டனர் பிறகு காவல் நிலையத்தில் என்னை ஒப்படைத்தனர்.

3) இந்த சம்பவத்தில் வக்கீல் மற்றும் எதிரிகள் சேர்ந்து சதி செய்ததாக சொன்னார்கள். காவல் நிலையத்தில் நான் இருந்த போது பெண் வழக்கறிஞர் வந்தார். ஆனால் எனக்கு அவரை தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

2ம் எதிரி பாரதிராஜா எனக்கு ஒரே மகன் என்றால் சரிதான். நான் குடியிருந்த வீடு என் மனைவி பெயரில் தான் இருந்தது என்றால் சரிதான். என் மனைவி இறந்த பிறகு என் மகன் அவருடைய பாகத்தை என்

பெயருக்கு பாகவிடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தாலும் எதிரி பாரதிராஜா அங்கு தான் குடியிருந்தார் என்றால் சரிதான். மருமகள் உடன் கருத்துவேறுபாடு இல்லை என்றால் இல்லை. அவ்வப்போது பேசிக்கொள்வோம். பாரதிராஜா எனக்கு உரிமையியல் வழக்கு தொடர்பாக வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்து நானும் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். நகை 3 பவுன், பணம் ரூ.1,50,000/- காணாமல் போனதற்கு புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் புகார் கொடுத்தேன் வழக்கு எல்லாம் போடவில்லை. நகை, பணம் 2023 ஆண்டு காணாமல் போனதா என்றால் இல்லை. 2024 ம் ஆண்டு காணாமல் போய்விட்டது. நான் என்னுடைய வீட்டில் இல்லை என்றும் உறவினர் வீட்டில் தான் இருந்தேன் என்றால் சண்டையின் காரணமாக அவ்வப்போது என்னுடைய அண்ணன் குமார் வீட்டில் இருந்தேன். குமார் வீட்டில் எத்தனை மாதங்கள் இருந்தேன் என்றால் 1 மாதம் அங்கயும் இருப்பேன் இங்கேயும் இருப்பேன். நகை இருந்த பீரோவை பூட்டி வைத்தேனா என்றால் சரிதான். சாவி பீரேவின் மீது வைத்திருந்தேன். நான் இருந்த அறையின் கதவை பூட்டி விட்டு சென்றேனா என்றால் இல்லை. அந்த அறையை எனது மகன் மற்றும் மருமகள் பயன்படுத்துவார்கள் நானும் பயன்படுத்துவேன். மாதம் மாதம் ரேசன் பொருள் வாங்குவேன் என்றால் சரிதான். காரில் வந்ததாக 3 பேரிகளின் பெயர்களை தெரியுமா என்றால் தெரியாது. தற்போது காரில் வந்த 3 பேர்களின் பெயர்களை தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் நான் எதிரிகளின் பெயர்களை சொல்லவில்லை என்றால் சரிதான். நான் காவல் நிலையம் வரும்போது நல்ல நிலையில் தான் இருந்தேன் என்றால் சரிதான். நான் காவல்

நிலையம் வருவதற்கு அரைமணி நேரம் கழித்து தான் குமார் வந்தார் என்றால் இல்லை. நாங்கள் காவல் நிலையம் வருவதற்கு முன்பே குமார் மற்றும் நிறைய நபர்கள் இருந்தனர். எந்த ஊரிலிருந்து வந்தேன் என்றால் தெரியாது. ஒரு ஊரில் ஒரு அறையில் அடைத்து வைத்திருந்தார்கள். எப்போது கூட்டி வந்தார்கள் என்றால் மாலை 06.00 முதல் 07.00 மணிக்கு அழைத்து வந்தார்கள். காவல் நிலையத்தில் என்னிடம் கையெழுத்து வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். வீட்டில் இருந்து என்னை அழைத்துசெல்லும்போது மாலை 04.00 மணி இருக்குமா என்றால் இல்லை. காலை 11.00 மணிமுதல் 01.00 மணி இருக்கும். அன்றைய தினம் காவல் நிலையத்தில் மாலை 06.00 கையெழுத்து வாங்கினார்களா என்றால் வந்தவுடன் விசாரித்தார்கள். 2 மற்றும் 3 எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் பிறகு தான் சுமார் இரவு 08.00 மணிக்கு வந்தார்கள். காவல் நிலையத்திலிருந்து என்னை விசாரிக்கவில்லை என்றால் இல்லை. அடுத்த நாள் காலை 07.00 மணியளவில் விசாரித்தார்கள். வீட்டிற்காக பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் சம்பவத்திற்கு பின்னிட்டு தான் பேசினார்கள் நான் பணம் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன். அதில் பஞ்சாயத்தில் பேசி கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். பஞ்சாயத்து பேசியது என் பங்காளி என்றால் இல்லை. இரு தரப்பினரும் தான் பேசினார்கள். நான் காவல் நிலையத்தில் இருக்கும்போது பெண் வழக்கறிஞர் வந்ததாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவர் வந்த பேசி வாக்குவாதம் ஏற்பட்டது. 3 நபர்கள் வந்து என்னை கூட்டி சென்றார்கள் என்று நான் பொய் சொல்கிறேன் என்றும் சிவில் பிரச்சனை வழக்குகாக பொய் சொல்கிறேன் என்றும் என்னை அடித்து இழுத்து கடத்திச் சென்றார்கள். கண்ணை கட்டி இழுத்துச்

சென்றதாக போலீஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் தவறு. சம்பவ இடம் நெருக்கமாக வீடுகள் இருக்கும் பகுதி என்றால் இல்லை. தள்ளி தள்ளி 50 வீடுகள் இருக்கும். 100 பேர் கூட்டமாக இருந்தனரா என்றால் 10 நபர்கள் தான் என்னை கடத்தி செல்லும்போது இருந்தனர். அவர்கள் மீது காரை மோதுவது போல் சென்றனர். நான் சொல்வது போல் சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/−அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டூர்.**

விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்– 11.51 a.m.
விசாரணை முடிக்கப்பட்ட நேரம் – 12.06 p.m.

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.I, Mettur**

**Case No : CC.116/2025**

**Prosecution side witness : அ.சா.3** **Date : 28.04.2025**

| | |
|---|---|
| **Name : முத்துசாமி** | **Taluk : மேட்டூர்** |
| **Father Name : வேலுசாமி** | **Calling : கூலி** |
| **Village : கொளத்தூர்** | **Age : 44** |

(A1 to A5 present. A6 absent. Filed petition and allowed )

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கொளத்தூரில் குடியிருக்கிறேன். மெக்கானிக்காக வேலை செய்து வருகிறேன். அ.சா.2 என்னுடைய சித்தப்பா. அ.சா.2 ன் உடைய மனைவிக்கு கேன்சர் இருந்தது. அவருடைய மகன் அம்மாவை சரிவர பாத்துக்கொள்ளவில்லை. அவருடைய அம்மா கேன்சர் நோயால் இறந்துவிட்டார். அ.சா.2 மற்றும் அவருடைய மகன் பாரதிராஜா இருவரும் ஒரே வீட்டில் தனி தனி அறையில் தங்கி இருந்தார்கள். பின்னிட்டு அவர்களுக்குள் என்ன பிரச்சனை ஏற்பட்டது என்று தெரியவில்லை. அ.சா.2 கோவிந்தசாமி அவருடைய உறவினரான மாரிமுத்து என்பவரின் வீட்டிற்கு சென்று குடியிருந்து வந்தார். அ.சா.2 அவருடைய மகனான எதிரி பாரதிராஜா உடன் குடியிருந்தபோது அவருடைய ரூமில் இருந்த பீரோவில் பணம் ரூ.1,50,000/–, 3 பவுன், வீட்டு பத்திரம், TVS XL RC Book வண்டியின் சாவி மற்றும் செல்போன் ஆகியவற்றை காணவில்லை என்று சொன்னார்.

2) இது சம்மந்தமாக நான் மாரிமுத்து, சுப்பிரமணி, குமார் அவர்களுடன் அ.சா.2 ம் அவருடைய மகனான பாரதிராஜா வீட்டிற்கு சென்று பொருட்கள் எங்கு என்று கேட்டோம். எங்களுக்கு தெரியாது என்று சொன்னார்கள். அதன் பிறகு 11.05.2024 ம் தேதி மதியம் 01.00 மணியளவில் அ.சா.2 அவருடைய வீட்டில் இருந்தபோது TN 33 AZ 6364 Innova காரில் 3 பேர் வந்தார்கள். அவர்கள் அ.சா.2 வங்கியில் லோன் வாங்கிவிட்டு கட்டவில்லை என்று அதனால் அவரை அழைத்துச் செல்கிறோம் என்று சொன்னார்கள் என்றும் நான் லோன் வாங்கவில்லை என்றும் அ.சா.2 சொல்லியுள்ளார். அ.சா.2 யை எதிரிகள் தர தரவென்று இழுத்துக்கொண்டு காரில் ஏற்றிக்கொண்டு கடத்திச் சென்றனர். அ.சா.2 என்னை காப்பாற்றுங்கள் என்று சத்தம் போட்டார். இது சம்மந்தமாக என் அண்ணன் குமார் எனக்கு போன் செய்து தகவல் சொன்னார். மேலும் காரை தடுக்கச் சென்ற எங்கள் மீது காரை மோதுவது போல் வந்து சென்று விட்டார்கள் என்றும் தடுத்தால் எங்கள் மீது காரை ஏற்றி கொன்றுவிடுவோம் என்றும் காரின் டிரைவர் சொன்னதாக சொன்னார். நாங்கள் வருவதற்கு கார் அங்கிருந்து சென்றுவிட்டது. அதன் பிறகு காவல் நிலையம் சென்று என் சித்தப்பாவை கடத்தி சென்றுவிட்டார்கள் என்று சொன்னேன். அ.சா.2 யை ஆஜர் எதிரிகள் திரும்பி கொளத்தூருக்கு கொண்டு வந்தனர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அ.சா.2 யை காலையில் அழைத்துச்சென்று மாலை 03.00 காவல் நிலையத்தில் ஒப்படைத்துவிட்டார்ளா என்றால் சரியல்ல. காலை 11.00 மணியளவில் கூட்டிச் சென்று இரவு 08.00 மணியளவில் காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தார்கள். இரவு 08.00 மணிக்கு பாரதிராஜா

மற்றும் அரவது மனைவி காவல் நிலையத்தில் இருந்தனர் என்றால் சரிதான். அ.சா.2 எனது சித்தப்பா. சித்தப்பாவிடம் அன்று மாலை 08.00 மணிக்கு போலீசார் விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். குமார் சுமார் 09.00 மணிக்கு வந்தரா என்றால் இல்லை. இந்த விவரம் முழுவதும் குமார் மூலம் தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். தகவல் தெரிந்து வீட்டிற்கு சென்றுவிட்டு காவல் நிலையம் சென்றேன் என்றால் சரிதான். பணம் ரூ.1,50,000/- மற்றும் நகை காணாமல் பேனது என்று யார் சொல்லி தெரிந்துக்கொண்டேன் என்றால் என் சித்தப்பா சொல்லி தெரிந்துக்கொண்டேன். அ.சா.2 க்கு எதிரி பாரதிராஜக்கு சிவில் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். அ.சா.2 என் சித்தப்பா என்பதால் சாட்சி சொல்ல வேண்டிய கட்டாயம் என்றால் சரிதான். சித்தப்பா சொன்னதன் அடிப்படையில் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரிதான். சித்தப்பாவிற்காக நீதிமன்றத்தில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்டது.**

**ஒம்/-அ.க.பத்மபிரியா,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர்.1,**
**மேட்டுர்.**